முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு மீது ரெய்டு –

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

முதல் பக்கத் தொடர்ச்சி

“ஊழல் பெருச்சாளிகளை எல்லாம் பேரக் குதிரை களாக மாற்றி தன் கட்சியில் இணைத்துக் கொண் டிருக்கும் த.வெ.க. எனும் “TN Branch Washing Machine”, தி.மு.க. ஆட்சியின் முன்னாள் அமைச்சர்களை மட்டும் குறிவைத்து நடத்திக் கொண்டிருக்கும் “Vettri Vendetta Politics” திட்டம், வழக்கம் போல் சட்டத்தின் முன் தோற்று, மக்கள் முன் தலைகுனிந்து நிற்கும்!”

“Vettri Vendetta Politics” மக்கள் முன் தலைகுனிந்து நிற்கும்!

ஊழல் பெருச்சாளிகளை எல்லாம் பேரக் குதிரைகளாக மாற்றி தன் கட் சியில் இணைத்துக் கொண்டிருக் கும் த.வெ.க. எனும் “TN Branch Washing Machine”, தி.மு.க. ஆட்சி யின் முன்னாள் அமைச்சர்களை மட் டும் குறிவைத்து நடத்திக் கொண்டி ருக்கும் “Vettri Vendetta Politics” திட்டம், வழக்கம் போல் சட்டத்தின் முன் தோற்று, மக்கள் முன் தலைகு னிந்து நிற்கும்!

திருச்சி கிழக்கு இடைத்தேர்தலுக் கான ரீல்ஸ் விடியோக்களைத் தயா ரிக்கவும் முதலமைச்சர் மேடையில் punch dialogue என்ற பெயரில் பல modulationஇல் காட்டுக்கத்து கத்த வும் நடத்தப்படும் இந்த ரெய்டுக ளைக் கண்டு தி.மு.க.வின் கடைக் கோடிக் தொண்டரின் கால் நகம் கூட அஞ்சாது!

இந்திய நாடே எள்ளி நகைக்கிறது!

சட்டம்ஒழுங்கு சீர்கேடு, துருப் பிடித்து விட்ட நிர்வாகம், வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வு என மக்களை பாதித்துக் கொண்டிருக் கும் இந்த த.வெ.க. ஆட்சியைக் கண்டு, தமிழ்நாடு மட்டுமல்ல இந்திய நாடே எள்ளி நகைக்கிறது.

வண்டவாளங்களைத் தண்டவாளம் ஏற்றுவோம்!

இதை எல்லாம் மறைக்க, தி.மு.க. வினருக்கு வாய்ப்பூட்டு போடலாம் என்று நினைக்கிறீர்கள். இனி இன் னும் இன்னும் வேகமாக த.வெ.க. அரசின் வண்டவாளங்களைத் தண்ட வாளம் ஏற்றுவோம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

குற்றவாளிகளை எல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு

கல்வியாளர்களை அச்சுறுத்திப் பார்ப்பதா?

பேராசிரியர் கலையரசன் கைது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக். 30 -

“குற்றவாளிகளையெல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு கல்வியாளர் களை அச்சுறுத்திப் பார்ப்பதா?” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேராசிரி யர் கலையரசன் கைது செய்யப்பட டது குறித்து கடும் கண்டனம் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட் டிருப்பதாவது:-

த.வெ.க. ஆட்சியில் வரலாறு காணாத விலைவாசி உயர்வை அ ம் ப ல ப் ப டு த் தி ய த ற் கா க #DravidianModel ஆசிரியர் கலை யரசன் அவர்கள் சட்டவிரோதமா கக் கைது: த.வெ.க. அரசின் உச்ச கட்ட பாசிசம்!

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (MIDS) உதவிப் பேராசிரியராக உள்ள முனைவர் கலையரசன் அவர்களை நேற்று அதிகாலை, சீருடை அணியாத காவலர்கள் சட்டவிரோதமாகக் கைது செய்து, வாடகை வாகனத் தில் ஏற்றிச் சென்ற செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளா னேன். கைது செய்யப்பட்டவர் சாதாரண நபரோ, குற்றப் பின் னணி கொண்டவரோ இல்லை.

தெரியாமல் கைது செய்துவிட்டோம் என்று கூறுவதா?

கலையரசன் அவர்கள் தமிழ் நாட்டின் முதன்மையான ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரி யும் பேராசிரியர். இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகமான JNUவில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். உலகின் தலைசிறந்த பல்க லைக்கழகமானகேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் பதிப்பித்த “The Dravidian Model” நூலின் ஆசிரியர்களில் ஒரு வர். ஒன்றிய அரசின் திட்டக் குழுவில் பொறுப்பு வகித்த வர். தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கை யைத் தயார் செய்வதில் பங் களித்தவர். எல்லாவற்றுக் கும் மேல், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவராக இருக்கும் தமிழ்நாடு கால நிலை மாற்ற நிர்வாகக் குழு வின் உறுப்பினராக இப்போ தும் இருப்பவர்.



அப்படிப்பட்டவரைத் தெரி யாமல் கைது செய்துவிட்டோம் என்று கூறுவது நம்பும்படி இல்லை. செய்யாத குற்றத்திற்காக, அடிப் படை உரிமைகள் அனைத்தையும் மறுத்து, அவரது செல்போனைப் பறித்து, கைது செய்து அலைக்க ழித்ததைச் சாதாரணச் செயலாக எவரும் கடந்துபோக முடியாது. குற் றவாளிகளை எல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு, கல்வியாளர்களை அச் சுறுத்திப் பார்ப்பது எவ்வளவு பெரிய அசிங்கம்?

உண்மையைச் சொன்னதற்காக கைது செய்வதா?

கலையரசன் அவர்கள்` ஏன் கைது செய்யப்பட்டார்? Dravidian Model என்ற பதத்தை முன் வைத்து, திராவிட ஆட்சியால் தமிழ் நாடு அடைந்த வளர்ச்சியை உல கம் முழுவதும் பறைசாற்றியதற் காகவா? த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகுதான், தமிழ்நாடு இதுவரை சந்தித்திராத விலைவாசி உயர் வைச் சந்தித்துள்ளது என்ற உண் மையைச் சொன்னதற்காகவா?

முட்டாள்களால் நிறைந்த த.வெ.க.!

முட்டாள்களால் நிறைந்த த.வெ.க.வுக்கும் கல்விக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது அனை வரும் அறிந்ததுதான். ஆனால், கல்வியாளர்களைக் கைது செய்து மிரட்டும் அளவுக்கு அறிவின் மீது ஒவ்வாமை கொண்டவர்களாக இவர்கள் நடந்துகொள்வார்கள் என நிச்சயமாக நினைக்க வில்லை. பாசிசத்தில் பா.ஜ.க.வையும் மிஞ்சி விடுவார்கள் என்பதைத்தான் இந்தக் கைது காட்டுகிறது. முதல மைச்சரின் ஒப்புதலோடும் உயரதி காரிகளின் அனுமதியோடும்தான் இந்த அத்துமீறல் நடக்கிறதா?

அரசிற்கு ஆதரவளிக்கும் கட்சிகள் கண்டும் காணாமல் இருப்பது ஏன்?

முனைவர் கலையரசன் அவர் கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. கடந்த ஆட்சிக்காலத்திலும், அவர் சுதந்திரமாகத் தன்னுடைய விமர்சனக் கருத்துகளை முன் வைத்திருக்கிறார். ஆனால், இந்தத் தரங்கெட்ட த.வெ.க. ஆட்சியோ, எங்கள் ஆட்சியைப் பற்றியோ நிர் வாகத் தோல்விகளைப் பற்றியோ ஊடகங்களில் உண்மையைப் பேசினால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று மிரட்டும் ரவுடி அர சாகச் செயல்பட்டுள்ளது. இப்படிப் பட்ட அரசிற்கு ஆதரவு அளித்துக் கொண்டு இருக்கும் கட்சிகள், இந்த அநியாயத்தைக் கண்டும் காணா மல் இருப்பது ஏன்? இதுதான் இவர் கள் பாசிசத்தை எதிர்த்துக் கேள்வி கேட்கும் அரசியலா?

புகழ்பெற்ற பேராசிரியர் மீது பொய்யான குற்றச்சாட்டைப் புனைந்து, அவரை அலைக்க ழித்து, துன்புறுத்திய த.வெ.க. அர சின் பாசிச செயல் கடும் கண்டனத் துக்குரியது. தமிழ்நாடு காவல் துறையும், அதற்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் அவர் களும் முனைவர் கலையரசன் அவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட் டுள்ளார்.

இது ஒரு கேலிக் கூத்தான அரசு! விலைவாசி உயர்வால்

விஜய் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மக்களால் சேமிக்க முடியவில்லை!

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, அக்.30

சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளைத் திசைதிருப்பத.வெ.க. அரசு முயற்சிக்கிறது என்றும், விஜய் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மக்களால் ஒரு பைசா கூட சேமிக்க முடி யவில்லை என்றும், இது ஒரு கேலிக் கூத் தான அரசு என்றும் குறிப்பிட்டு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் பேட்டி அளித்துள்ளார்.

அது வருமாறு:-

த.வெ.க. அரசில் காவல் துறையை சட் டம் ஒழுங்கு காப்பாற்றுவதற்கு பொது மக்களை காப்பாற்றுவதற்கு பயன்படுத்த தாமல், சிறையை சிறையில இருக்கக்கூடிய கைதிகளுக்கு கூட பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது. பழனி கோயிலுக்கு சொந் தமான 100 கோடி ரூபாய் இடத்தை இரண்டு கோடி ரூபாய்க்கு விற்ற வழக்கில் முக்கிய குற்றவாளி சிறைச்சாலைக்கு உயி ரோடு சென்றவர் ஒரு சில நாட்களில் சாகி றார், அதை குறித்து இதுவரை எந்த விசா ரணையும் இல்லை. சிறைச்சாலையில் எப்படி செத்தார் மெயின் அக்யூஸ்ட்? நிர் மல் குமாருடைய பொறுப்பில் இருக்கக் கூடியதுதான் சிறைச்சாலை.

சிறைச்சாலையில் ஒருவர் சாகிறார் என் றால் அது சந்தேகத்திற்குரியதாக இருக் கும். நான் பலமுறை அதுபற்றி கேட்டும் அது ஒரு விசாரணை கூட போடவில்லை. சாதாரணமாய் இப்படிப்பட்ட சாவுகள் நடந்தால் விசாரணை செய்து பொதுமக் களுக்கு வெளிப்படையாகக் காட்டும் சூழல் இருக்கும். ஆனால் இவ்வளவு அக் கிரமங்கள் நடந்து கொண்டிருக்கிற தமிழ் நாட்டில் இன்றைக்கு காவல்துறையை ஏவல்துறையாக மாற்றி உள்ளனர்.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர் கைது செய்யப்பட்டது முறையாக கைது செய்யப்பட்டாரா, நியாயம்தானா? இதை அனைத்து வழக்கறிஞர்களும், பார் கவுன்சிலே தலையிட வேண்டும். ஒன் றரை மணிக்கு நீதிமன்றத்திலே அவரு டைய ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்ப டுகிறது. உடனடியாக அடுத்த கட்டம் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் போவதற்கு மூத்த வழக்கறிஞருடைய அலுவலகத் திற்கு சென்று, அவரோடு பேசிக் கொண் டிருக்கிற நேரத்தில் காவல்துறை அத்துமீறி ஒரு வழக்கறிஞருடைய அலுவலகத்திலே சென்று அவரை கைது செய்திருப்பது மிக மிக கேவலமான ஒரு செயல். உயர் நீதி மன்றமும் உச்ச நீதிமன்றமும் இது போன்ற செயல்களில் காவல்துறை ஈடுப டக்கூடாது என்று பல தீர்ப்புகள் இருக் கின்றன.

அதையெல்லாம் நீதிமன்றத்தில் நிச்சய மாக அதனுடைய கவனத்தில் கொண்டு வருவோம். இது மிகப்பெரிய ஒரு அயோக் கியத்தனம். காரணம் என்னவென்றால், வழக்கறிஞருடைய தொழில் என்பது யாராக இருந்தாலும், அதாவது ஜாமீன் விடுகிற போது கூட குறிப்பிட்ட நாட்க ளுக்கு பிறகு நீதிமன்றத்திலே ஜாமீன் வழங்குகிற போது சொல்வார்கள், 'Accused is to arrange his defence' என்றுதான் சொல் வார்கள். அவரை பாதுகாத்துக் கொள்வ தற்காக, அவர் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்களால் தான் இவரை ஜாமீனில் விடுகிறோம் என்று கூட நீதிமன்றத்தில் தீர்ப்புகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

ஆக, அதுபோல ஒரு ஜனநாயக நாட் டில் இப்படிப்பட்ட உரிமைகள் இருக்கிற நேரத்தில், ஒரு வழக்கறிஞருடைய அது வும் மூத்த வழக்கறிஞர், அடிஷனல் சொலிசிட்டர் ஜெனரலாக இருந்தவர் வில்சன் அவர்கள். அவருடைய அலுவல கத்திற்கு சென்று அத்துமீறி, அவர் ஒன் றரை மணிக்கு தீர்ப்பு வருது, 'நீங்கள் சுப் ரீம் கோர்ட்டில் போடுங்கள், சுப்ரீம் கோர்ட்டும் ரிஜெக்ட் பண்ணிருந்தா, அதுக்கு பிறகு காவல்துறையினர் கைது செய்வதில் ஆட்சேபனை இல்லை'. ஆனால் அவர் வந்து அப்பீல் செய்வதற்கு ரிய நேரத்தை நேச்சுரல் ஜஸ்டிஸ் படி கொடுத்தாகணும். ஒரு கோர்ட்டில் நிரா கரித்தா அடுத்த கோர்ட்டுக்கு போகிற வரை நேரம் வழங்கப்பட வேண்டும் என் பதுதான் நியதி. ஆனால், காவல்துறையினர் உடனடியாக போய் அவரை எந்த அள வுக்கு துன்புறுத்தி, இரவு இரண்டரை மணி, மூன்று மணிக்கு கொண்டு போய் ரிமாண்ட் செய்கிறார்கள்.

இதிலே கவனம் செலுத்துகிற விஜய்



யின் அரசு ஏன் சட்ட ஒழுங்கைக் காப் பாற்றுவதற்கு கவனம் செலுத்தவில்லை.? தவெகவினர் மீது பல குற்றச்சாட்டுகள். அதுமட்டுமல்ல, திருப்பதி கொடை ஊர் வலத்தில் ஒரு காவல்துறையைச் சார்ந்த வுமன் கான்ஸ்டபிளையே ஒரு தவெக காரர் பாலியல்துன்புறுத்தல் பண்ணிருக் கிறார். காவல்துறை கைது செய்து வழக்கு பதிவு செய்கிறது. ஆனால் மேலிடத்திலி ருந்து தொலைபேசி கால் வந்தவுடனே, அந்த குற்றவாளி தவெகவை சார்ந்த கார ணத்தினால் விடுவிக்கப்படுகிறார். சிங்கப் படையை சார்ந்த ஒரு பெண் போலீ சையே ஒருத்தன் செக்சுவல் ஹராஸ் பண்ணதை காவல்துறையில இருந்து பெயில்ல விடுறாங்க.

இதற்கெல்லாம் நேரம் செலுத்துகிற விஜய் அவர்கள் இன்றைக்கு தமிழ்நாட் டிலே திமுகவைச் சார்ந்தவர்களுடைய வீடுகளில் எல்லாம் சோதனை செய்கிறார் கள் என்றால், அதைப் பற்றி கவலை இல்லை, எங்களுக்கு வருத்தம் இல்லை. இதுபோல பல சோதனைகள் நாங்கள் பார்த்திருக்கிறோம். 2001ல் என்ன ஆச்சு? கலைஞர் அவர்களை நள்ளிரவில் கைது செய்தார்கள். கொண்டு போய் சிறைச்சா லையில் வைத்தார்கள். எங்கள் தலைவர் தளபதி அவர்களை கைது செய்து மதுரை சிறைக்கு அனுப்பினார்கள். இத்தனை வருஷம் ஆச்சு, ஒரு எஃப்.ஐ.ஆர் போட முடிந்ததா? கேஸ் போட முடிந்ததா? ஒரு நாள் செய்தி, ஒரு நாள் பரபரப்பு, அவ்வ ளவுதான். திராவிட முன்னேற்றக் கழகம் இது போன்ற பல வழக்குகளை சந்தித்து, அதெல்லாம் தவிடுபொடியாக்கி இருக்கு. இந்த ரைடு எல்லாம் ஒரு நாள் பத்திரிகை செய்தி வரும். அந்த செய்தியை வைத் துக்கொண்டு இந்த சட்ட ஒழுங்கு பிரச்சி னைகள் எல்லாம் கவனத்தைத் திசை திருப்பலாம் என்று விஜய் அவர்கள் முயற் சிக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் களத் திலே இறங்கிவிட்டது. நீங்கள் கைது செய் தாலும் பரவாயில்லை, 31ஆம் தேதி நடை பெறுகிற கண்டன ஆர்ப்பாட்டம், தமிழ்நாடு முழுவதும் லட்சக்கணக்கான தாய்மார்கள் கலந்து கொண்டு, சட்ட ஒழுங்கு பிரச்சனை, விலைவாசி உயர்வு இப்படி பல்வேறு பிரச்சினைகளால் தாய் மார்கள் பெரும் பாதிப்பு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றைக்கு குறைஞ்ச பட்சம் 2000 ரூபாய்க்கு மேல செலவு செய்றார்கள்.

அதாவது, நான் ஒரு சில இடத்தில விசாரிச்சதில் சொல்றாங்க, தளபதி மு.க.ஸ்டாலினுடைய ஆட்சியில் மாச மான ஒரு 1000 ரூபாய் சேமித்து நாங்க பேங்கல போடுவோம், 1000 ரூபாய் உரிமை தொகை வரும். இந்த விடியல் பய ணம் போறதுனால அதுல ஒரு 1000 ரூபாய் மிச்சம், 2000, 3000 மாசமான மிச் சம் பண்ணுவோம். தீபாவளி, பொங்கல் வரும்போது அதுக்கு நகை வாங்குவோம். ஆனால் இவர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஒரு பைசா கூட சேமிக்க முடியவில்லை. நீங்கல்லாம் ஊடகக்காரர்கள், இதெல் லாம் போய் பாமர மக்கள் மத்தியில எடுத்து மக்களுக்கு போட்டு காட்டணும். காரணம், தளபதி ஆட்சியில் எவ்வளவு சேவிங் இருந்தது, இன்னைக்கு வந்து எவ் வளவு அந்த சேவிங் எல்லாம் எங்க போச்சு, விலைவாசி எவ்வளவு ஏறி இருக்கு, எப்படிப்பட்ட நிலையில் இருக் கிறார்கள் தாய்மார்கள் என்பதை நீங்கள் தான் வெளிச்சம் போட்டு காட்ட வேண் டும்.

செய்தியாளர் கேள்விக்கு பதில்

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் கைது, இப்போ கே.என்.நேருவுக்கு சொந் தமான இடங்கள் ரைடு இது எல்லாமே வந்து என்னன்னா, திருச்சி கிழக்கு இந்த இடைத்தேர்தலை மையமாக வச்சுதான் அரசு இப்படி ஒரு நடவடிக்கைக்கு போறாங்கன்னு பத்திரிக்கையில் செய்தி கள் எல்லாம் எழுதி இருக்காங்க, அப்படி யென்று பார்க்கிறீர்களா?

அன்பில் மகேஷ் வந்து பக்கத்து தொகு திக்காரர், நேரு வந்து அந்த தொகுதி பொறுப்பேற்று நடத்த போறார். அவங் களுக்கு தகவல் போயிருக்கும் இல் லையா? ஆகையினால அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், திமுகவை பொறுத்தமட்டிலும் எங்கள் கட்சியில் கே.என்.நேரு போன்றவர்கள் எல்லாம் பல வழக்குகளை சந்தித்து வெற்றி பெற்று வந்தவர். ஆக, இதெல்லாம் அவருக்கு ஒன் றுமே கிடையாது.

நீங்கள் அடிக்க அடிக்கத்தான் பந்து உய ரமாக எழும். தீட்ட தீட்டத்தான் வைரம் ஜொலிக்கும். அடக்க அடக்கத்தான் திமு கக்காரன் துடிச்சி எழுந்துருவான். ஆக, நீங்கள் வழக்கு ஒவ்வொருக்கும் வழக்கு போட்டீங்கன்னா ஒரு படி மேலே எகிறி குதித்துதான் கட்சிக்காரன் வருவானே தவிர, யாரும் சோர்ந்து போய்விட மாட் டார்கள். அது நேருவாக இருந்தாலும் சரி, மகேஷாக இருந்தாலும் சரி, யாராக இருந் தாலும் சரி.

திமுகவை பொறுத்தமட்டிலும் நீங்கள் எத்தனை வழக்கு போட்டாலும் அதை பொதுமக்கள் மத்தியிலே எடுத்து சொல்லி விளக்கி மக்களை எங்கள் பக்கம் திருப்பு கிற ஆற்றலும் திறமையும் திமுக தலைவர் களிலிருந்து தொண்டர்கள் வரை இருக்கி றது.

பொருளாதார நிபுணர் கலையரசன் வந்து அதிகாலை காவல்துறை அழைத்து செல்லப்பட்டு அப்புறம் விடுவிக்கப்பட்டிருக்காரு.?

இதுபோல படித்தவர்களுக்கே இப்படி பண்றாங்க. ஆனால் தவெக ஐ.டி.விங்ல இருந்து வர வாசங்கள் எல்லாம் பார்த்தா ஒவ்வொன்றும் அவ்வளவு கேவலமாகுது. ஆனால் அவர்களைப் பற்றி ஒரு நடவ டிக்கை இல்லையே? பல புகார்களை கமி ஷனரிடம் எடுத்துட்டு போய் நாங்க கொடுத்துட்டோம். ஏறத்தாழ எங்கள் வழக்கறிஞரணியின் சார்பிலே 40, 50 வழக்கு புகார் கொடுத்திருக்கோம். ஒரு புகார் மீது கூட இதுவரை காவல்துறை நடவடிக்கை எடுக்கல. ஆனால் ஒரு படித் தவர், பேராசிரியர், ஆராய்ச்சியாளர், அவரை வந்து முகாந்திரம் இல்லாம போயி கூட்டிட்டு போறாங்க, பாதில விடுறாங்க. இது என்ன கேலிக் கூத்தான அரசாங்கமா? இது போல கேலிக் கூத்து லாம் எந்த ஆட்சியும் நடக்கவில்லை.

இவ்வாறு அவர் பேட்டியளித்துள்ளார்.